# பத்திரிக்கை செய்தி

## கட்டிட வரைபட அனுமதி வழங்க லஞ்சம் கேட்டு பெற்ற பஞ்சாயத்து தலைவர் மற்றும் பஞ்சாயத்து செயலாளர் கைது

திருப்பூர் மாவட்டம், ஊத்துக்குளி தாலுக்கா, சுண்டக்காம்பாளையம் கிராமம், கொல்லங்காட்டைச் சேர்ந்த வெங்கடாச்சலம் என்பவரின் மகன் திரு.ராதாகிருஷ்ணன் என்பவர் கடந்த 2004ம் ஆண்டு முதல் ஆண்டவர் ரைஸ் மில் என்ற பெயரில் ரைஸ்மில் நடத்தி வருகிறார். மேலும் அதன் அருகில் சுமார் 4500 சதுரடி இடத்தில் தகர செட் அமைத்து மாவு மில் நடத்தி வருகிறார். கடந்த 2022ம் வருடம் மேற்படி இடத்திற்கு அருகில் இருந்த 12 செண்ட் இடத்தினை விலைக்கு வாங்கி சுமார் 2000 சதுரடியில் கூடுதலாக தகரசெட் போட்டு மாவு மில்லை விஸ்தரிப்பு செய்துள்ளார்.

கடந்த ஒரு மாதத்திற்கு முன்பு சுண்டக்காம்பாளையம் பஞ்சாயத்து தலைவர் திரு.லோகநாதன் @ ஆனந்த் என்பவர் திரு.ராதாகிருஷ்ணன் அவர்களின் வீட்டிற்கு சென்று நீங்கள் போட்டுள்ள தகர செட் அனைத்திற்கும் பஞ்சாயத்தில் பில்டிங் அப்ரூவல் வாங்க வேண்டும் இல்லையென்றால் அபராதம் கட்ட வேண்டி வரும் என்று சொல்லி சீக்கிரம் பில்டிங் அப்ரூவல் வாங்குமாறு கூறியுள்ளார்.

எனவே கடந்த 13.07.2023ம் தேதி திரு.ராதாகிருஷ்ணன் சுண்டக்காம்பாளையம் பஞ்சாயத்து அலுவலகத்தில் பஞ்சாயத்து தலைவர் திரு.லோகநாதன் @ ஆனந்த் அவர்களை சந்தித்து பில்டிங் அப்ரூவலுக்கு மனு கொடுப்பது சம்பந்தமாக கேட்டபோது அவர் 2000 சதுரடி வரைக்கும் தான் அப்ரூவல் கொடுக்க தனக்கு அதிகாரம் இருப்பதாகவும், அதனால் 2000 சதுரடிக்குள் வருமாறு தகரசெட் போட்டுள்ள இடத்தை நான்காக பிரித்து காட்டி, பில்டிங் பிளான் மற்றும் எஸ்டிமேசன் தனித்தனியாக இன்ஜினியரிடம் வாங்கி 4 மனுக்களாக கொண்டு வந்து பஞ்சாயத்து செக்ரட்டரி திரு.அமிர்தலிங்கத்திடம் கொடுக்குமாறு கூறியுள்ளார். மேலும், பில்டிங் பிளான் அப்ரூவல் வழங்க அரசுக்கு செலுத்த வேண்டிய கட்டணம் போக தனக்கு தனியாக ரூ.3,60,000/-தரவேண்டும் என்று கேட்டுள்ளார். அதற்கு திரு.ராதாகிருஷ்ணன் அவ்வளவு பணமெல்லாம் தர இயலாது என்று சொன்னதற்கு பஞ்சாயத்து தலைவர் ரூ.30,000/-ஐ குறைத்துக்கொண்டு ரூ.3,30,000/- தரும்படி கேட்டுள்ளார்.

மேலும் திரு.லோகநாதன் கடந்த 17.07.2023ம் தேதி திரு.ராதாகிருஷ்ணன் வீட்டிற்கு சென்று ஏன் இன்னும் பில்டிங் பிளான் அப்ரூவல் வாங்க முயற்சி பண்ணவில்லை சீக்கிரமாக மனு கொடுங்கள் என்று சொன்னதாகவும், அதற்கு திரு.ராதாகிருஷ்ணன் இன்ஜினியரிடம் புளூ பிரிண்ட் போட்டுத்தர சொல்லியுள்ளதாகவும், அது வந்தவுடன் பஞ்சாயத்து அலுவலகத்திற்கு வந்து கொடுத்துவிடுவதாகவும் கூறியுள்ளார். அப்போது திரு.லோகநாதன் தான் கேட்ட பணம் ரூ.3,30,000/- என்னாச்சு என்று கேட்டுள்ளார். அதற்கு திரு.ராதாகிருஷ்ணன் அரசுக்கு செலுத்தவேண்டிய பணத்தை வேண்டுமானால் தற்போது கட்டி விடுகிறேன் என்று சொன்னதற்கு உங்களால் உடனடியா பணம் ரூ.3,30,000/-ஐ முழுவதும் தர முடிலைன்னா முதல் தவணையா பாதி பணத்தை ரெடி செய்து கொடுக்கும்படியும் பில்டிங் அப்ரூவல் ரெடி செய்யும்போது மீதி பணத்தை தரும்படியும் கண்டிப்புடன் சொல்லியுள்ளார்.

கடந்த 27.07.2023ம் தேதி திரு.ராதாகிருஷ்ணன் சுண்டக்காம்பாளையம் பஞ்சாயத்து அலுவலகத்திற்கு சென்று பஞ்சாயத்து தலைவர் திரு.லோகநாதன் சொன்னபடி பில்டிங் அப்ரூவலுக்கு தனித் தனியாக 4 மனுக்களை கொடுத்துள்ளார்.

31.07.2023ம் தேதி பஞ்சாயத்து அலுவலகம் சென்று தலைவரிடம் பில்டிங் அப்ரூவல் பற்றி கேட்டபோது, அதற்கு திரு.லோகநாதன், தான் கேட்ட பணம் ரூ.3,30,000/- கொண்டு வந்திருக்கீங்களான்னு கேட்டுள்ளார். அதற்கு திரு.ராதாகிருஷ்ணன் தன்னிடம் கையில் பணம் ரூ.1,00,000/- தான் உள்ளது என்று சொன்னதற்கு பஞ்சாயத்து பிரசிடெண்ட் அந்த பணத்தை கொடுங்கள் என்று கேட்டு வாங்கிக்கொண்டு மீதிப்பணம் ரூ.2,30,000/-யை எப்போது தருவீங்க எனக் கேட்டுள்ளார். இன்னும் ஒரு வாரத்திற்குள் பணம் 2,30,000/-ஐ தரலீன்னா உங்களோட பில்டிங் பிளான் அப்ரூவலுக்கான மனுக்களை திருப்பி அனுப்பிடுவேன். பிறகு பில்டிங் அப்ரூவல் வாங்க முடியாதுன்னு சொல்லியுள்ளார். மேலும், திரு.லோகநாதன் பஞ்சாயத்து செயலாளர் திரு.அமிர்தலிங்கம் மூலம் ரூ.2,30,000/-யை திரு.ராதாகிருஷ்ணன் அவர்களிடம் போனிலும் நேரிலும் கேட்டு அடிக்கடி தொந்தரவு செய்து வந்துள்ளார். அதனால் 04.08.2023ம் தேதி திரு.ராதாகிருஷ்ணன் கொடுத்த புகாரின்பேரில் சுண்டக்காம்பாளையம் பஞ்சாயத்து தலைவர் திரு.லோகநாதன் @ ஆனந்த் என்பவர் மீது திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவில் வழக்கு பதிவு செய்யப்பட்டது.

இன்று 17.08.2023ம் தேதி திரு.ராதாகிருஷ்ணன் சுண்டக்காம்பாளையம் பஞ்சாயத்து அலுவலகம் சென்று திரு.லோகநாதன் அவர்களை சந்தித்து தனது பில்டிங் அப்ரூவல் குறித்து கேட்ட போது, பஞ்சாயத்து தலைவர் திரு.லோகநாதன் மற்றும் பஞ்சாயத்து செயலாளர் திரு.அமிர்தலிங்கம் சொன்னபடி தற்காலிக பணியாளர் திருமதி.கிருத்திகா என்பவர் பணம் ரூ.2,30,000/-ஐ திரு.ராதாகிருஷ்ணன் அவர்களிடமிருந்து லஞ்சமாக பெற்றுள்ளார். இதனால் பஞ்சாயத்து தலைவர் திரு.லோகநாதன் மற்றும் பஞ்சாயத்து செயலாளர் திரு.அமிர்தலிங்கம் ஆகியோர் கைது செய்யப்பட்டனர்.